**கொடகவெல பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 27 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 27 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் கொடகவெல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்ற தண்டப்பணம் குறைவாக பில்போடப்படல் ரூபா 125,583 தொகைக்காக சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளில் சரியாக சீராக்கத்தினை மேற்கொள்ள வேண்டும். | மேலதிகமாக கிடைத்த தொகையை கணக்கீடு செய்யும் இரட்டை பதிவை இனங்காண இயலாததனால் மிகை பெறப்படலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 317,410 மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உரிய சீராக்கத்தினை மேற்கொண்டு கணக்குகளை சரிசெய்ய வேண்டும். | எதிர்காலதில் நிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஆண்டிற்குரிய வட்டியை மாத்திரம் சரியாக கணக்கிட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | 03 கணக்கு விடயங்களுக்காக மீளாய்வாண்டு இறுதியில் நிதிகூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் துணைப்பதிவேடு மீதிகளிடையில் ரூபா 112,380 ஆன வத்தியாசம் ஆனது. | நிதிகூற்றுக்கள் மற்றும் உரிய துணைப்பதிவேடுகளில் கணக்கு மீதிகள் சரியாக காட்டப்பட வேண்டும். | வித்தியாசத்திற்கு காரணங்கள் இனங்காணப்பட்டுள்ளது. பதிவேடுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றுமு முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்ப்பு** | **இணங்காமை** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான 12 வாகனங்களின் எரி பொருள் பாவனை பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சகல வாகனங்களில் எரி பொருள் பாவனையும் பரிசீலனை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2005 ஜுன் 01 ஆம் திகதிய 2005/04 ஆம் இலக்க “ சில காணிகளை விற்பதன் மீது வரி அறவிடல்” எனும் சபரகமுவ உள்ளூராட்ச்சி ஆணையாளர் சுற்றறிக்கையின் 02(iv) பந்தி | வைப்பு பணம் செலுத்தியதன் பின்னர் விற்பனை செய்யப்படும் காணித்துண்டுகளின் விற்பனை விலை, உறுதி இலக்கம் ஆகிய விபரங்கள் உள்ளிட்ட அறிக்கையுடன் விற்பனை செய்யப்படும் காணிகளின் பெறுமதிக்குரய 1 சதவீத வரிப்பணத்தை காணித்துண்டு விற்பனை செய்யப்படுவதுடன் விற்பனையாளரினால் சபைக்கு செலுத்துவது எனும் நிபந்தனைகள் உள்ளிட்ட ஒப்பந்தத்தில் கைசாத்திலின்றி அதிகார எல்லையில் 02 காணி ஏலவிற்பனைக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை | காணித் துண்டு தளத் திட்டம் தொடர்பாக ஒப்பந்தம் கைச்சாத்திட தவரியுள்ளதுடன், தற்போது ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகிறது |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 3,751,407 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 14,475,978 ஆனது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 பில் போடப்பட்ட வருமானம் | 2018 சேர்க்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம | 2017 பில் போடப்பட்ட வருமானம | 2017 சேர்க்கப்பட்ட வருமானம | 2017 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 6,853,464 | 6,474,707 | 6,000,039 | 3,821,378 | 6,223,607 | 6,419,784 | 6,093,202 | 3,101,940 |
| (ii) | வாடகை | 7,682,640 | 8,293,506 | 8,175,115 | 269,543 | 7,850,458 | 7,163,848 | 7,106,582 | 405,952 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,611,200 | 1,821,562 | 1,819,199 | - | 1,153,200 | 1,410,043 | 1,459,693 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 12,948,536 | 13,881,927 | 29,884,906 | 14,761,666 | 14,335,487 | 14,919,263 | 10,651,425 | 18,101,766 |

**2.2.2 வீத வரி மற்றும் குத்தகை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 1,571,747 ஆன நிலுவை வீத வரியினுள் 03 வருடங்களை விஞ்சிய காலபகுதியிலிருந்து நிலவி வரும் 48 அலகுகளுக்குரிய மீதி ரூபா 279,569 ஆனது. அந்த நிலுவை மீதிகளை அறவிடல் தொடர்பாக சபையின் செயற்பாடு பலவினமான நிலையில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் சேர்ப்பதற்கு முறையான மற்றும் துரிதமான நிகழ்ச்சித்திட்டமொன்று திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். | வருமான நிருவாகி வெற்றிடம் தற்போது நிரப்பப்பட்டுள்ளதுடன், அதற்கு மேலதிகமாக வருமானம் சேர்ப்பதற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வருமானம் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 82,945 ஆன நிலுவை ஏக்கர் வரியனுள் 05 வருடங்களை விஞ்சிய பழமையான 60 அலகுகளுக்குரிய மீதி ரூபா 60,712 ஆனது. | நிலுவை வருமானம் சேர்ப்பதற்கு முறையான மற்றும் துரிதமான நிகழ்ச்சித்திட்டமொன்று திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். | ஏக்கர் வரி ஒப்பாய்வொன்று மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் தயாரித்துக்கொன்டிருப்பதுடன், நிலுவை ஏக்கர் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலுவை கடை வாடகை காரணத்தால் ரக்வான வியாபார கட்டிடத் தொகுதியின் 02 கடையறைகள் 2007 மற்றும் 2015 ஆண்டுகளில் சபைக்கு | நிலுவை வருமானம் சேர்ப்பதற்கு முறையான நிகழ்ச்சித்திட்டமொ | 02 கடையறைகளின் நிலுவை கடைவாடகையை எதிர்காலத்தில் |

| | | |
|---|---|---|
| மீண்டும் சுவீகரித்துக்கொண்டிருந்த போதும் அத்திகதிக்கு நிலவின நிலுவை கடை வாடகை ரூபா 78,285 யினை மீளாய்வாண்டு இறுதி வரை அறவிடுவதற்கு அல்லது குத்தகைகாரர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கையேனும் மேற்கொண்டிருக்கவில்லை. | ன்று திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும்.. | அறவிடுவதற்கும் கொடுப்பனவை மறுத்தால் உரிய சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 1988 இல் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இல் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இல் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்கள் பிரகாரம் சுற்றாடல் அனுமதிபத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய போதும், பெற்றுக்கொள்ளாத 20 நிறுவனங்கள் மற்றும் அனுமதிபத்திரம் புதுப்படுத்தாத 04 நிறுவனங்கள் காணப்பட்டன. இதன் காரணத்தால் சபைக்கு ரூபா 96,800 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்ததுடன், சபை அதிகார எல்லையில் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக சபையின் பொறுப்பும் போதியளவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல அனுமதிபத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய எல்லா நிறுவனங்களுக்கும் அனுமதிபத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரங்கள் பெற்றுக்கொள்ளாத வேலைகள் தொடர்பாக தற்போது கள பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. |

**2.2.5 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மாகாணசபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டியதாக காணப்பட்ட ரூபா 62,481 தொகை 2019 ஏப்ரில் வரையும் கிடைத்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை சேர்ப்பதற்கு முறையான திட்டமொன்று தயாரித்து செயற்படுத்த வேண்டும். | முத்திரைக் கட்டணம் ரூபா 62,481 இனை பெற்று தறுமாறு கோரி சபரகமுவ உள்ளூராட்சி ஆணையாளரிற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை

ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **செயல் நடவடிக்கை திட்டம்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டினுள் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 1,650,000 பெறுமதியான 03 அபிவிருத்தி கருத்திட்டங்களை போதியளவு பணம் இல்லாததனால் செயற்படுத்துவத்கு இயலாமலிருந்தது. | பாதீட்டு இலக்குகளை அடைவதற்கு தேவையான ஒதுக்கீடு மேற்கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணம் போதியளவு இல்லாததனால் அக் கருத்திட்ங்கள் செயற்படுத்தப்பவில்லை என அறியதருகிறேன். |
| (ii) | 2017 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை காலபகுதிற்காக தயாரிக்கப்பட்டிருந்த அபிவிருத்தி திட்டத்தில் சபையினால் ஒவ்வொரு ஆண்டுகளிலும் மேற்கொள்ள எதிர்பார்க்கும் அபிவிருத்தி கருத்திட்டங்களை வெவ்வேறாக இனங்கண்டிருக்கிவல்லை. | அபிவிருத்தி திட்டத்தினுள் ஒவ்வொரு ஆண்டுகளிற்கான அபிவிருத்தி கருத்திட்டங்களையும் குறிப்பாக இனங்கண்டிருக்க வேண்டும். | 2019 – 2022 அபிவிருத்தி திட்டத்தினுள் ஒவ்வொரு ஆண்டுகளிலும் மேற்கொள்ள எதிர்பார்க்கும் அபிவிருத்தி கருத்திட்டங்களை வெவ்வேறாக இனங்கண்டு உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

(ஆ) **கழிவுப் பொருள் முகாமை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| முறையான கழிவு பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சி திட்டமொன்றை திட்டமிட்டு செயற்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறதி வரையும் சபையினால் இயலாமலிருந்தது. | முறையான கழிவுப் பொருள் முகாமை நிகழ்சித் திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைபடுத்த வேண்டும். | கழிவு பொருள் முகாமைத்துவத்தை முறையாக்குவதற்காக தற்போது ஒழுங்கான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் கழிவு பொருட்களை சேர்க்கும் போது வெவ்வேறாக பெற்றுக்கொள்வதுடன் வேறுபடுத்தப்பட்ட குப்பைகள் வெவ்வேறாக வெளியேற்றப்படுகின்றன. |

(இ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கங்களிற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை தரத்தை மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் மீளாய்வாண்டு இறுதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் சரியாக இனங்கண்டு நீண்டகால திட்டங்களை தயாரிக்க வேண்டும். | இதன் கீழ் கொடகவெல பிரதேச சபைக்கு சொந்தமான பலவின்ன பண்ணையின் கழிவு பொருள் முகாமைத்துவ கருத்திட்டமொன்று ஆரம்பிபிக்கப்பட்டுள்ளது. |

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீண்டகாலமாக தீர்க்கப்படாத முற்பணத்தினுள் உள்ளடங்கிய சேமலாப நிதியத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 37,866 ஆன மிகை அறவீடு தொகைக்கு பொறுப்பான தறப்பினர் இனங்கண்டு அறவிடுவதற்கு மீளாய்வாண்டு இறுதிவரையும் சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த மிகை அறவீடு அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களிலிடமிருந்து அறவிடவேண்டும். | மிகை அறவீடை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.3 மனித வள முகாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 முதல் 2018 வரையான காலப்பகுதியினுள் சேவை ஒப்பந்தத்தின் மீது சேர்க்கப்பட்டிருந்த 12 ஊழியர்களை மீளாய்வாண்டு இறுதிவரையும் சேவையின் ஈடுபடுத்திருந்ததுடன், அவர்களுக்காக 2018 ஆண்டினுள் சபை நிதியத்தினால் ரூபா 3,183,782 சம்பளம் மற்றும் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக முறையாக ஊழியர்கள் சேர்க்கப்பட வேண்டும். | சேவை ஒப்பந்தத்தின் மீது சேர்க்கப்பட்டிருந்த 12 ஊழியர்களையும் அத்தியவசமான விடயங்களில் சேவையின் ஈடுபடுத்யுள்ளதுடன், அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் இவர்கள் சேவை புரிவதால் அவர்களை நிரந்தரமான நிலைக்கு நியமிக்குமாறு இரத்தினபுரி உள்ளுராட்சி உதவி ஆணையாளரினூடாக கோரிக்கை விடுத்துள்ளதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நீண்ட காலமாக நிலவி வரும் 06 உத்தியோகத்தர்களின் ரூபா 90,447 ஆன ஊழியர் கடன் மீதி மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையான மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வெண்டும். | எதிர்காலத்தில் இந்த தொகையை அறவிடுவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் தாமதமின்றி செயற்படுத்துகிறேன். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உரிய முறையில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செய்யப்படாத காரணத்தால் உடைந்த நிலையில் உள்ள சபை ஊழியர்கள் வசித்திருக்கும் 04 விடுதிகளிற்கான வாடகையை குறைக்குமாறு உள்ளுராட்ச்சி ஆணையாளரிடம் கோரிய போதும், குறித்த வீடுகளை பழுதுபார்ப்பதன் மீது சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான விடுதிகளை முறையாக பராமரிக்க வேண்டும். | அவ் விடுதிகளின் பராமரிப்பு நடவடிக்கைகளை செய்வதற்கான கோரிக்கைகள் கிடைக்கும் விதத்தில் தற்காலிக தீர்வு வழங்க சபை நடவடிக்கை எடுத்துள்ளதுடன், முறையாக அவ் விடுதிகளை பராமரிக்கவும் அகுபோன்றே விடுதி வாடகையை குறைக்கவும் மகாசபைக்கு போன்றே உள்ளுராட்சி உதவி ஆணையாளரிற்கும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |

**3.4.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான கட்டிடங்கள் மற்றும் சுடுகாடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 37 காணிகளின் உரித்துரிமையை முறையாக சுவீகரித்துக்கொள்ள மீளாய்வாண்டு இறுதிவரையும் சபைக்கு இயலாமலிருந்தது. | காணியின் உரித்துரிமையை சுவீகரித்திற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்கு சொந்தமான 37 சுடுகாடுகளின் உரித்துரிமை பெயரளவில் பிரதேச சபைக்கு இருந்ததுடன், நிகழ்காலத்தில் அக் காணிகளில் உரித்துரிமை பிரதேச செயலாளருக்கு சொந்தமாக உள்ளது. சுவீகரித்துத் தருமாறு கோரிகைவிடுத்த போதும் இது வரையும் அவர்கள் எந்தப் பொருப்பையும் எடுக்கவில்லை என அறிவிக்கிறேன். |

**3.5 முறையற்ற கொடுக்கல் வாஙகல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுகாதார ஊழியர்களுக்காக டீ சர்ட் கொள்வனவு செய்வதற்கு 2018 மே 08 ஆம் திகதி தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 15,500 ஆன முற்பணமொன்று | குறித்த பணத்தை அறவிடுவதற்கு செயற்பட வேண்டும். | அப் பணத்தை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கிறேன். |

வழங்கிருந்த போதும் 2019 மே 10 ஆம் திகதி வரையும் கட்டளையிடப்பட்ட டீ சர்ட்கள் சபைக்கு கிடைக்காததனால் முற்பணத்தை மீள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.6 பெறுகைகள்

#### 3.6.1 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது ரூபா 4,496,835 பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியமை. | 2019 ஆண்டு முதல் பெறுகைகள் திட்டமொன்றை தயாரித்து உரிய முறையில் பெறுகைகள் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

#### 3.6.2 ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | இரக்வான ஹொரமுள்ள ஒபடகந்த பாதையின் பொலொன்னல்ல பக்கத்து பாதையின் கீழ் பகுதியில் மண்சரிவு ஏற்பட்ட இடத்திலுள்ள பக்கமதில் மற்றும் மதகு நிர்மாணம் ரூபா 1,075,902 செலவில் 2017 திசெம்பர் 31 திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. பக்க மதில் மற்றும் பாதை இடையே மண் நிரைத்திருந்தமை உரிய நியமத்தில் மேற்கொள்ளாததன் காரணமாக 2018 மார்ச் அளவில் பக்க மதிலின் மண் நிரைத்தலின் மீதான கொன்கிரீட் படை மற்றும் கொன்கிரீட் பாதை உடைந்திந்ததுடன், 2019 பெபரவரி வரையும் அந்நிலையை சீர்செய்திருக்கவில்லை. அதன் காரணமாக குறித்த வேலை விடயத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 96,497 தொகை விளைவற்று நிலவியது. | உரிய மேற்பார்வையின் கீழ் வேலைகளின் குறைபாடுகளை சரியான நியமத்திற்கமைய பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | அகழ்வுச் சுரங்கமொன்று காரணமாக ஏற்பட்ட தாக்கம் நிறைவுரும் வரை தொடர்புடைய சங்கம் காலம் கோரியுள்ளதுடன், அதன் பின்னர் அப்பகுதியை பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாதிரி பரிசோதனையின் போது 05 வேலைகளில் பாதையின் மேற்பகுதி நிரப்பல், உருளை போக்குவரத்து மற்றும் பக்க பலகைகளிற்காக கூட்டுத்தொதை ரூபா 27,931 தொகை மேற்கொள்ளப்படாத வேலைகளிற்காக செலுத்தப்பட்டிருந்தது. | வேலைகளை உரிய மேற்பார்வையுடன் செயற்படுத்த வேண்டியதுடன், மேலதிக கொடுப்பனவை மீள் அறவிட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 11 செலவின விடயங்களிற்காக ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 2,984,400 ஆன மொத்த ஒதுக்கீட்டில் 42 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சளவில் மீதியாக இருந்தது. | வருடாந்த ஒதுக்கீடு பயனுள்ளதாக பயன்படுத்தப்பட வேண்டும். | கடந்த ஆண்டுகளில் செலவினங்களை கவனித்து ஒதுக்கீடு ஏற்பாடு செய்ததுடன், அச் செலவின விடயங்களுக்காக வவுசர் சமர்பிக்கப்படாததனால் ஒதுக்கீடு மீதியானது. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்த முயற்சி எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | 2019 ஆண்டின் முதற் காலாணடிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டுள்ளது. |